| | | | |
|---|---|---|---|
| பள்ளிக்கல்வித்துறை – பெரம்பலூர் மாவட்டம் - ஆறாம் வகுப்பு | | | |
| தமிழ் – இரண்டாம் பருவத் தேர்வு – 2024 - 2025 | | | |
| உத்தேச விடைக்குறிப்புகள் | | | |
| பகுதி - I | | | |
| I | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | | 5 x 1 = 5 |
| 1 | இ | ஊரில் பள்ளிக் கூடம் இல்லை | 1 |
| 2 | ஆ | இன்சொல் | 1 |
| 3 | இ | இரா. அரங்கநாதன் | 1 |
| 4 | ஆ | மூன்று | 1 |
| 5 | இ | வீரம் | 1 |
| II | கோடிட்ட இடங்களை நிரப்புக. | | 4 x 1 = 4 |
| 6 | துரைராசு | | 1 |
| 7 | தந்தை பெரியார் | | 1 |
| 8 | வணிகர் | | 1 |
| 9 | 216 | | 1 |
| III | பொருத்துக. | | 4 x 1 = 4 |
| 10 | விடிவெள்ளி - விளக்கு | | 1 |
| 11 | மணல் - பஞ்சு மெத்தை | | 1 |
| 12 | புயல் - ஊஞ்சல் | | 1 |
| 13 | பனி மூட்டம் - போர்வை | | 1 |
| IV | எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க. | | 5 x 2 = 10 |
| 14 | ண,ன,ந, ல,ள,ழ, ர,ற | | 2 |
| 15 | மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி வாழவேண்டும்.<br>வெற்றிகளையும் விருதுகளையும் பெருமையையும் பெற வேண்டும்.<br>பெற்ற தாயின் புகழும் நம் நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழ வேண்டும் | | 2 |
| 16 | அமிழ்தமே ஆனாலும் விருந்தினர் இருக்கும்போது தான்மட்டும் உண்பது விரும்பத்தக்கது அன்று. | | 2 |
| 17 | மீனவர்கள் தமது வீடாகக் கட்டுமரத்தையும், செல்வமாக மீன்களையும் கருதுகிறார்கள் | | 2 |
| 18 | ஒரு பொருளைப் பிறரிடம் இருந்து வாங்குவதும் பிறருக்கு விற்பதும் வணிகம் ஆகும் | | 2 |
| 19 | வீட்டில் உள்ள பயனற்ற பொருள்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்வதற்காகப் போகிப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. | | 2 |
| 20 | ஆராரோ – ஆரிரரோ வாழை - வந்தாரை<br>நந்தவனம் – நற்றமிழ் சுவையான - சோழநாட்டு<br>பண்ணோடு – பார் குளிக்க - குலம்வாழ<br>தந்தத்திலே – தங்கத்திலே பசியை - பாண்டிநாட்டு<br>செல்லமாய் – சேரநாட்டு கண்ணே – கண்ணுறங்கு | | 2 |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| V | **அடி பிறழாமல் எழுதுக.** | 4+2=6 |
| 21 | கடலோடு விளையாடு<br>பாயும்புயல் நம்ஊஞ்சல் - ஜலசா<br>பனிமுட்டம் உடல்போர்வை - ஜலசா<br>காயும்கதிர்ச் சுடர்கூரை - ஜலசா<br>கட்டுமரம் வாழும்வீடு - ஜலசா<br>மின்னல்வரி அரிச்சுவடி - ஜலசா<br>பிடிக்கும்மீன்கள் நம்பொருள்கள் - ஜலசா<br>முழுநிலவே கண்ணாடி - ஜலசா<br>மூச்சடக்கும் நீச்சல் யோகம் - ஜலசா<br>தொழும்தலைவன் பெருவானம் - ஜலசா<br>துணிவோடு தொழில்செய்வோம் - ஜலசா | 4 |
| 22 | வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்<br>உள்ளத்து அனையது உயர்வு | 2 |
| VI | எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க. | 6 x 2 = 12 |
| 23 அ | நீர் **<u>எங்கே</u>** தேங்கி இருக்கிறது ? | 1 |
| ஆ | யார் **<u>அவர்</u>** தெரியுமா? | 1 |
| 24 | *பொருள் தருக.* | |
| அ | மாற்றார் - மற்றவர் | 1 |
| ஆ | நந்தவனம் - பூஞ்சோலை | 1 |
| 25 | *கலைச்சொல் தருக.* | |
| அ | Consumer - நுகர்வோர் | 1 |
| ஆ | Merchant - வணிகர் | 1 |
| 26 | *சேர்த்து எழுதுக.* | |
| அ | உள்ளுவது + எல்லாம் - உள்ளுவதெல்லாம் | 1 |
| ஆ | வாழை + இலை - வாழையிலை | 1 |
| 27 | *பிரித்து எழுதுக.* | |
| அ | படிப்பறிவு - படிப்பு + அறிவு | 1 |
| ஆ | நானிலம் - நான்கு + நிலம் | 1 |
| 28 | *தொகைச் சொற்களை விரித்து எழுதுக..* | |
| அ | முத்தேன் – கொம்புத்தேன், பொந்துத்தேன், கொசுத்தேன் | 1 |
| ஆ | முத்தமிழ் – இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் | 1 |
| 29 | *இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.* | |
| அ | ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவு இலா<br>ஊக்கம் உடையான் உழை. | 2 |

| | | |
|---|---|---|
| 30 | *மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.* | |
| அ | மன்டபம் - மண்டபம் | 1 |
| ஆ | கன்டம் - கண்டம் | 1 |
| VII | எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. | 3 x 3 = 9 |
| 31 | 1. பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல்.<br>2. பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்.<br>3. இனிய சொற்களைப் பேசுதல்.<br>4. எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல்.<br>5. கல்வி அறிவு பெறுதல்.<br>6.எல்லோரையும் சமமாகப் பேணுதல்<br>7. அறிவுடையவராய் இருத்தல்.<br>8. நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல் | 3 |
| 32 | தமிழ்ச்சோலையில் பூ எடுத்து, இசையுடன் பாடி உலகம் புகழ வந்த குழந்தை.<br>இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளிக்கும் சோழநாட்டு முக்கனி.<br>குளம்வெட்டி, அணை கட்டி, குடிமக்களின் பசியைப் போக்கும் பாண்டி நாட்டின் முத்தமிழ்.<br>இவ்வாறு தாய் தன் குழந்தையைப் பாராட்டுகிறாள். | 3 |
| 33 | மன்னனையும் குறை இல்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் மன்னனைவிடக் கற்றவரே சிறந்தவர்.<br>மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு.<br>கல்வி கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு. | 3 |
| 34 | மாமல்லபுரத்தில் காணவேண்டிய இடங்கள்<br>1. அர்ச்சுனன் தபசு    2. கடற்கரைக்கோவில்<br>3. பஞ்சபாண்டவர் ரதம்    4. ஒற்றைக்கல் யானை<br>5.குகைக்கோவில்    6. புலிக்குகை<br>7. திருக்கடல் மல்லை    8. கண்ணனின் வெண்ணெய்ப் பந்து<br>9. கலங்கரை விளக்கம் | 3 |
| 35 | பழந்தமிழர் ஏற்றுமதி செய்த பொருள்கள்:<br>தேக்கு, மயில்தோகை, அரிசி, சந்தனம், இஞ்சி, மிளகு.<br>பழந்தமிழர் இறக்குமதி செய்த பொருள்கள்:<br>கண்ணாடி,கற்பூரம், பட்டு, குதிரைகள். | 3 |
| IX | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. | 2 x 5 = 10 |
| 36 | மாமாவுக்குக் கடிதம்<br>34. பாரதி நகர், அழகாபுரி.<br>09-12-24.<br>அன்பிற்கினிய மாமாவுக்கு.<br>நலம், நாடுவதும் அதுவே. முதல் பருவத்தேர்வில் நான் எங்கள் பள்ளியில் முதல் மதிப்பெண் | 5 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | பெற்றேன். அதைத் தொடர்ந்து வந்த என் பிறந்தநாளுக்குப் பரிசு அனுப்பினீர்கள். அதைப் பிரித்துப் பார்த்த எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஆம்! அழகிய கைக்கடிகாரம். இரவிலும் ஒளிரும் தன்மை அதன் சிறப்பு.<br>காலம் பொன் போன்றது என்பதை உணர்ந்து கடமை ஆற்ற எனக்கு இது பெரிதும் உதவுகிறது. எதிர்வரும் இரண்டாம் பருவத்தேர்விலும் நான் முதல் மதிப்பெண் பெறுவேன். தங்களின் பிறந்தநாள் பரிசுக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.<br>என்றும் நன்றியுடன்,<br>தங்கள் அன்பு மருமகன்,<br>அ.எழில் முதல்வன்.<br>உறைமேலிட்ட முகவரி<br>திரு.க.செல்வன்,<br>61. அன்பு நகர், மதுரை | |
| 37 | காமராசர் முதல் அமைச்சராகப் பதவியேற்ற நேரத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன.<br>அவற்றை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.<br>மாநிலம் முழுவதும் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றித் தீவிரமாக நடைமுறைப்படுத்தினார்.<br>மாணவர்கள் பசியின்றிப் படிக்க மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.<br>பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றிக் குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார். | 5 |
| 38 | நரசிம்ம வர்ம பல்லவர் சிறுவனாக இருந்த போது தன் தந்தை மகேந்திர வர்ம பல்லவருடன் மாமல்லபுரம் கடற்கரைக்குச் சென்றார்.<br>பாறையின் அருகில் விளையாடிக் கொண்டிருந்தபோது அதன் நிழல் யானை போல் தரையில் விழக் கண்டார். இதைத் தன் தந்தையிடம் கூறவே, அவரும் ஆம்! அருகில் இருக்கும் குன்றத்தின் நிழல் கோயிலைப் போல விழுகிறது என்றார்.<br>அந்தக் குன்றைக் கோயில் போலவும் இந்தக் குன்றை யானை போலவும் சிற்பமாக மாற்றலாம். இவை இரண்டை மட்டுமல்ல! இங்கு உள்ள ஒவ்வொன்றையும் நந்தி, சிங்கம், யானை என்று மாற்றுவோம். இந்தக் கடற்கரையையே சிற்பக் கலைக்கூடமாக மாற்றி விடலாம் என்று சொன்னார் மாமல்லர் மகேந்திரவர்ம பல்லவர்.<br>அவரால் தொடங்கப்பட்ட அப்பணி நரசிம்மவர், அவருடைய மகன், பேரன் காலம் வரை நான்கு தலைமுறைகளாக நடைபெற்றது. அவ்வாறு உருவாக்கப்பட்டவை தான் மாமல்லபுரச் சிற்பங்கள். | 5 |



| ஆக்கம் | |
|---|---|
| இராஜ.வேல்முருகன்<br>நேரு மேல்நிலைப்பள்ளி, எறையூர்<br>வேப்பந்தட்டை வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621133 | பெ. ஜெயராமன்<br>அரசு மேல்நிலைப்பள்ளி, அம்மாபாளையம்,<br>பெரம்பலூர் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621101. |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com